# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)**

**ஆணை எண்: 168/பேரூ/2022**
**நாள் : 02.11.2022**

திரு. S. செல்வகுமார்,
தென்காசி மாவட்டம். ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
சிவகிரி பேரூராட்சி. ... எதிர்மனுதாரர்

தென்காசி, வடக்கு ஒப்பனை தெரு, எண்.96ல் வசிக்கும் சந்திரா ஏஜென்ஸிஸ் என்கின்ற நிறுவனத்தின் உரிமையாளர் திரு. S. செல்வகுமார் என்பவரின் 30.09.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.10.2022-ல் பெறப்பட்டு 168/பேரூ/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தென்காசி, வடக்கு ஒப்பனை தெரு, எண்.96ல் வசிக்கும் திரு. S. செல்வகுமார் என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

"தென்காசி மாவட்டம் சிவகிரி பேரூராட்சி செயல் அலுவலர் நவநீதகிருஷ்ணன் அவர்களால் மாதாமாதம் ரூ.8950/–ல் இருந்து ரூ.9950/–க்குள் பில் போட்டு பொருட்களே வாங்காமல் பில்கள் மட்டும் வாங்கப்பட்டு பில் கொடுத்துள்ள நிறுவனங்களுக்கு பேரூராட்சியில் இருந்து நிறுவனத்தின் பெயரில் செக் கொடுக்கப்பட்டு நிறுவனத்தாரால் செக் தொகையில் 10 சதவீதம் முதல் 20 சதவீதம் வரைக்கும் கமிஷன் எடுத்துக்கொண்டு மீதி தொகை பேரூராட்சி நிர்வாகத்திடம் கொடுக்கப்படுகின்றன.

2022–2023ம் ஆண்டுக்கான பொருட்கள் சப்ளைக்கு வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி என்ற பெயரில் தகுதியே இல்லாத பல நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெறப்பட்டு பொருட்கள் எதுவும் வாங்காமல் பில்கள் மட்டும் வாங்கப்படுகின்றன.

பேரூராட்சி இயக்குநர் சுற்றறிக்கை எண் 1/2008/இ2/நாள் 25.01.2008 மற்றும் 3416/2013/ஊ1/நாள் 28.06.2013 சுற்றறிக்கையின் நகல்களின்படியும் ஒப்பந்தப்புள்ளி நடத்தாமல் தங்களுக்கு வேண்டிய நிறுவனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள்.

சிவகிரி பேரூராட்சியில் பிளிச்சிங் பவுடர், பினாயில், சுண்ணாம்புதூள், கொசுமருந்துகள், பொதுசுகாதார தளவாட பொருட்கள் போன்ற இனங்களுக்கும் புல் வெட்டுதல், குழிதோண்டுதல், ஜெராக்ஸ் எடுத்தல், ஜேசிபி இயந்திரம் வாடகைக்கு எடுத்தல், கணினி பராமரிப்பு, கணினி டோனர் ரீபிள் செய்தல், மின்மோட்டார் பழுது நீக்கம், குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகள் இனங்களுக்கு GST வரி கட்டும் நிறுவனங்களிடம் பில் வாங்காமல் பேரூராட்சி அலுவலக உதவியாளர் பேரூராட்சியில் பணி செய்யும் பணியாளர்களை வைத்து வெள்ளை பேப்பரிலும் ஜி.எஸ்.டி பதிவு இல்லாத, வரி கட்டாத ஏதோ நிறுவனத்தின் பெயரில் போலியாக பில் தயார் செய்து போலியான பெயரில் செக் கொடுத்து பேரூராட்சி நிர்வாகத்தினரே முறைகேடு செய்கின்றார்கள்.

சிவகிரி பேரூராட்சியில் 2019–2020, 2020–2021, 2021–2022ம் மார்க்கெட் விலையை விட மிக அதிக விலைக்கு சோலார் உயர் கோபுர விளக்குகள் ( 6 எண்ணம் பிட்டிங்ஸ் உள்ளது), தெரு விளக்கு எல்இடி விளக்குகள், நீம் ஆயில் (ECOCLEAN 50 PLUS) போன்ற இனங்களுக்கு பேப்பர் விளம்பரம், ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு பொதுநிதியில் இருந்து பல கோடிகளுக்கு வாங்கப்பட்டு மிக பெரிய அளவில் முறைகேடு நடைபெற்றுள்ளன.

பேரூராட்சிகளின் தரம் வாரியாக (பொதுசுகாதார பொருட்கள் வாயிலாக சுகாதார ஆய்வாளர் அல்லது சுகாதார பணி மேற்பார்வையாளர் மூலம்), (தெரு விளக்கு பொருட்கள் வாயிலாக மின் பணியாளர் மூலம்), (குடிநீர் குழாய் பொருட்கள் வாயிலாக பிட்டர் அல்லது பம்பு ஆப்பரேட்டர் மூலம்) செக் எழுதும் அலுவலக உதவியாளர் மூலம் மாதம் ரூபாய் 5 இலட்சம் முதல் 10 இலட்சம் வரைக்கும் பேரூராட்சி பொதுநிதியில் இருந்து பேரூராட்சி நிர்வாகம் மிகபெரிய அளவில் முறைகேடுகள் செய்து வருகின்றன. பணம் பிரிக்கப்படும் பங்குகள் பற்றிய விவரம், பேரூராட்சி இயக்குநர் அலுவலகம் சென்னை பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் அலுவலகம், மாவட்ட உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை அலுவலகம், பேரூராட்சி செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலக உதவியாளர், பொருட்கள் இருப்பு பதிவேடுகள் பராமரிப்பு செய்யும் சம்மந்தப்பட்ட துறை பணியாளர் மற்றும் பேரூராட்சி மன்றம்.

2020–2021, 2021–2022, 2022–2023 ஆண்டு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட நிறுவனங்களை நேரில் அழைத்தும், பைல்கள் மற்றும் பில்களை வாங்கியும் ஆராய்ந்து பொருட்களே வாங்காமல் பில் மட்டும் வாங்கும் பேரூராட்சி நிர்வாகம் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேற்காணும் முறைகேட்டை முற்றிலும் ஒழிக்க தற்பொழுது பேரூராட்சியால் நடைபெறும் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி முறையை ரத்து செய்து பேரூராட்சிக்கு தேவைக்கான பொருட்களுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து E-TOKEN DIGITAL SIGNER TENTER TWO COVER SYSTEM முறையிலும் ஜி.எஸ்.டி. பதிவு பெற்ற நிறுவனங்களிடம் விலைப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி வாங்கியும் பணிக்கான பில்தொகை நிறுவனத்தின் பெயரில் கோடிட்ட காசோலையாக வழங்க பேரூராட்சிக்கு உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கண்ட முறையீடுகள்அனைத்தும் மாவட்ட உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை அலுவலகம், பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் அலுவலகம் ஆதரவுடன் நடைபெறுகின்றது. தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் பேரூராட்சிகளில் தகவல் கோரினால் பேரூராட்சிசெயல் அலுவலர்கள் ஏதாவது ஒரு விதியை காரணம் தெரிவித்து பதில் தர இயலாது என்று ஒரு வரியில் தகவல் கேட்ட 30 நாட்கள் கழித்து ஒரு வரியில் பதில் தருகின்றார்கள்" என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி சிவகிரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 06.10.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

**3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 06.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 13.10.2022 அன்று தென்காசி முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.**

4) மனுதாரர் 13.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

**மனுதாரர் 13.10.2022 அன்று தென்காசி முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"தென்காசி மாவட்டம் சிவகிரி பேரூராட்சியில் 2019–2020, 2020–2021, 2021–22ம் மார்க்கெட் விலையை விட மிக அதிக விலைக்கு சோலார் உயர் கோபுர விளக்குகள், எல் இ டி தெரு விளக்குகள், நீம் ஆயில் போன்றவை வாங்கப்பட்டுள்ளன. இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் சிவகிரி பேரூராட்சியால் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்படுவதில்லை.

எனவே ஒப்பந்த முறைகேடுகளை ஒழித்திட DIGITAL SIGNER TENDER TWO COVER SYSTEM முறையை பேரூராட்சிகளில் அமல்படுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அலுவலகத்தில் பொருட்கள் வாங்கியதாகக் கணக்கு காட்டி, அதற்கான பில் தொகைக்கு குறிப்பிட்ட நிறுவனத்தின் பெயரில் காசோலை வழங்கி, அந்நிறுவனங்கள் அந்த தொகையில், ஒரு குறிப்பிட்ட தொகையை கமிஷனாக எடுத்துக்கொண்டு மீதித் தொகையை பேரூராட்சி அலுவலர்களுக்கு கொடுத்து விடுகின்றனர். எனவே இதுபோன்ற மோசடிகள் பேரூராட்சியில் நடப்பதை தடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் 30.9.2022 நாளிட்ட எனது மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

**5) தென்காசி மாவட்டம், சிவகிரி தேர்வு நிலைப் பேரூராட்சி செயல் அலுவலர் 13.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :**

தென்காசி மாவட்டம் சிவகிரி பேரூராட்சியில் பேரூராட்சிகளின் இயக்குநரின் சுற்றறிக்கை நாள் 25.1.2008 மற்றும் 28.6.2013–ன்படியே ஒப்பந்தப்புள்ளிகள் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுகின்றன.

2022–23ம் ஆண்டுக்கான வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் பத்திரிகையில் முறையாக விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. 2020ம் ஆண்டிற்கான வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 5.3.2020 அன்றும், 2021–22ற்கான விளம்பரம் 11.2.2021 அன்றும், 2022–23ம் ஆண்டிற்கான விளம்பரம் 10.3.2022 அன்றும் முறையாக கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும் கொள்முதல் செய்யப்பட்ட நிறுவன பட்டியல்படி கோடிட்ட காசோலை நிறுவனத்தின் பெயரிலேயே வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ஒப்பந்தப் புள்ளி கோருவதில் எவ்வித முறைகேடும் சிவகிரி பேரூராட்சியில் நடைபெறவில்லை என தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 13.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**6) தென்காசி மாவட்டம், சிவகிரி தேர்வு நிலைப் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:**

நான் 8.11.2021 முதல் சிவகிரி பேரூராட்சியின் செயல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். தென்காசி மாவட்டம் சிவகிரி பேரூராட்சியில் 2019-2020 முதல் நாளது தேதி வரை அடியிற்கண்ட செயல் அலுவலர்கள் பணிபுரிந்துள்ளார்கள்.

**2019–2020**

| அலுவலர் பெயர் / பதவி திருவாளர்கள் | பதவிக்காலம் |
|---|---|
| மூ.சி.சுப்பிரமணியன், செயல் அலுவலர் | 01.04.2019 – 27.10.2019 |
| க.லெனின், செயல் அலுவலர் | 28.10.2019 – 31.03.2020 |

**2020–2021**

| அலுவலர் பெயர் / பதவி திருவாளர்கள் | பதவிக்காலம் |
|---|---|
| க.லெனின், செயல் அலுவலர் | 01.04.2020 – 30.09.2020 |
| க.வெங்கடகோபு, செயல் அலுவலர் | 01.10.2020 – 26.02.2021 |
| அ.அரசப்பன், செயல் அலுவலர் | 27.02.2021-31.03.2021 |

**2021–2022**

| அலுவலர் பெயர் / பதவி திருவாளர்கள் | பதவிக்காலம் |
|---|---|
| அ. அரசப்பன், செயல் அலுவலர் | 01.04.2021 – 05.08.2021 |
| சீ.சுதா, செயல் அலுவலர் (பொ) | 5.8.2021 – 12.08.2021 |
| பி.ஆர்.திருநாவுக்கரசு, செயல் அலுவலர் | 13.08.2021 – 25.10.2021 |
| இரா. மோகன மாரியம்மாள்,<br>செயல் அலுவலர் (பொ) | 25.10.2021 -07.11.2021 |
| தி.நவநீதகிருஷ்ணன், செயல் அலுவலர் | 08.11.2021 – 31.03.2022 |

**2022–2023**

| அலுவலர் பெயர் / பதவி திருவாளர்கள் | பதவிக்காலம் |
|---|---|
| தி.நவநீதகிருஷ்ணன், செயல் அலுவலர் | 01.4.2022 – Till date |

சிவகிரி பேரூராட்சி பகுதியானது தென்காசி மாவட்டத்தில் உள்ள ஒரு வட்டாரத் தலைமையிட பகுதியாகும். இப்பேரூராட்சியானது 47 சதுர கி.மீ. பரப்பளவு கொண்டுள்ள தேர்வு நிலைப்பேரூராட்சியாகும். நகராட்சிக்கு இணையான பரப்பளவு கொண்டுள்ள இப்பேரூராட்சியின் மொத்த மக்கள் தொகை 25574 ஆகும். மொத்த சாலையின் நீளம் 39.666 கி.மீ. வடிகால் நீளம் 52.50 கி.மீ. சுகாதார வளாகங்கள்–24, பொது சுகாதார வளாகம் –3, குடிநீர் பகிர்மான குழாய் நீளம் –5 கி.மீ. விநியோக குழாய் நீளம் –38 கி.மீ ஆகும். மேலும் இப்பேரூராட்சி பகுதியில் நீதிமன்றம், தாலுகா அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், நெடுஞ்சாலைத்துறை, காவல் நிலையம், தபால் நிலையம், சார்நிலை கருவூலம், அரசு மருத்துவமனை, மின்வாரியம், பி.எஸ்.என்.எல். கால்நடை மருத்துவமனை, வேளாண்மை அறை அலுவலகம், 17 பள்ளிகள் போன்ற அரசு அலுவலகங்கள் உள்ளது. மேலும் இப்பேரூராட்சி பகுதியில் கூடாரப்பாறை முருகன் கோவில், திரௌபதியம்மன் கோவில் உட்பட பல முக்கியமான கோவில்கள் உள்ளதால் பல்வேறு திருவிழாக்கள் வருடந்தோறும் நடைபெற்று வருகிறது.

1. இப்பேரூராட்சியில் பொதுசுகாதாரம் மற்றும் பொதுமக்களுக்கு விநியோகத்திற்கு தேவையான பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்புத்தூள் மற்றும் குடிநீர் பராமரிப்புக்குத் தேவையான பொருட்கள் வருடாந்திர ஒப்பந்ததாரரிடம் தேவைக்கேற்ப பணியாளார் கோரிக்கை மற்றும் மன்ற உறுப்பினர்களின் கோரிக்கை அடிப்படையில் கொள்முதல் செய்யப்படும் பொருட்கள் இவ்வலுவலக இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு அதன்பின்னரே கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு நிறுவனத்தின் பெயரிலேயே கோடிட்ட காசோலை மூலம் செயல் அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்டு தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதில் மனுதாரர் கூறியவாறு எவ்வித முறைகேடு நடைபெறவில்லை என்ற விபரம் பணிந்து சமர்ப்பித்துக் கொள்ளப்படுகிறது.

2. சிவகிரி பேரூராட்சியில் 2022–2023ஆம் ஆண்டுக்கான வருடாந்திர ஒப்புந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண். 90/2022 நாள் 07.04.2022 இன்படி தினபூமி நெல்லை 08.04.2022ஆம் தேதிய நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. அதனடிப்படையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதியுடைய நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு மன்றக்கூட்டத்தில் பொருள் சேர்க்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் பொருட்கள் கொள்முதல் செய்வது மன்றக் கூட்டத்தால் தகுதியுடையதாக தேர்வு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு விநியோக உத்தரவு முறையாக வழங்கப்பட்டு பொருட்கள் கொள்முதல் செய்து இவ்வலுவலக இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு அதன்பின்னரே கொள்முதல் செய்யப்பட்ட நிறுவன பட்டியல்படி கோடிட்ட காசோலை நிறுவனத்தின் பெயரிலேயே வழங்கப்பட்டு வருகிறது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

3. சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை எண்.01/2008.இ2 நாள்: 25.01.2008 மற்றும் 3416/2013/ஊ1 நாள்: 28.06.2013 ஆகிய சுற்றறிக்கைகளின் படியே ஒப்பந்தப்புள்ளிகள் முறையாக நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்பட்டு அதற்கு ஒப்புநோக்கு பட்டியல்

தயார் செய்து அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை தேர்வு செய்யப்பட்டு மன்றத் தீர்மான நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சுற்றறிக்கைகளை முறையாக பின்பற்றியே வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி நடத்தப்படுகிறது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

4. சிவகிரி பேரூராட்சியில் உள்ளூர் குடிநீர் ஆதார மூலமும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் வழங்கப்படும் கூட்டு குடிநீர் மூலமும் பொது மக்களுக்கு தினசரி சுமார் 17.80 இலட்சம் லிட்டர் கொள்ளளவு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே தினசரி குளோரினேசன் செய்யும் வகைக்கு மட்டுமே 7.50 கிலோ பிளிச்சிங் பவுடர் தண்ணீருக்கும் மட்டும் செலவிடப்படுகிறது. அதுபோக சிவகிரி பேரூராட்சியில் உள்ள 112 சின்டெக்ஸ் தொட்டிகளுக்கு மற்றும் பொது சுகாதாரப் பணிக்கும் தேவையான பிளிச்சிங் பவுடர் செலவிடப்படுகிறது. இந்நிலையில் 2022–2023 ஆம் ஆண்டு 01.04.2022 முதல் நாளது தேதி வரை 6 மாதத்தில் 1400 கிலோ ( 7 பட்டியல்கள்) பிளிச்சிங் பவுடர் மட்டுமே வருாந்திர ஒப்பந்ததாரர் ஸ்ரீ ஆனந்த ஏஜென்ஸிஸ் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு கோடிட்ட காசோலை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி செலவினங்களுக்கு மன்ற கூட்டம் நடைபெற்ற வரையிலும் மன்ற ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. மேலும் இப்பேரூராட்சி பகுதியில் நீதிமன்றம் தாலுகா அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், நெடுஞ்சாலைத்துறை, காவல் நிலையம், தபால் நிலையம், சார்நிலை கருவூலம், அரசு மருத்துவமனை, மின்வாரியம், பி.எஸ்.என்.எல்., கால்நடை மருத்துவமனை வேளாண்மை துறை அலுவலகம், 17 பள்ளிகள் போன்ற அரசு அலுவலகங்கள் உள்ளது. இப்பேரூராட்சியின் வடிகால் நீளம் 52.50 கி.மீ. உள்ளது. மேலும் இப்பேரூராட்சி பகுதியில் முக்கியமான கோவில்கள் உள்ளதால் திருவிழாக்களுக்கு போன்றவற்றிற்கு 2022–2023 ஆம் ஆண்டு 01.04.2022 முதல் நாளது தேதிவரை 6 மாதத்திற்கு (8 பட்டியல்கள்) 9600 கிலோ சுண்ணாம்பு தூள் தேவைக்கு ஏற்ப மட்டுமே வருடாந்திர ஒப்பந்ததாரர் தனுசியா கெமிக்கல்ஸ் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு கோடிட்ட காசோலை வழங்கப்பட்டுள்ளது. கொள்முதல் செய்யப்பட்டு பினாயில், சுண்ணாம்புதூள், கொசுமருந்துகள், பொது சுகாதார தளவாட பொருட்கள் போன்ற இனங்களுக்கும், குழி தோண்டுதல், ஜெராக்ஸ் எடுத்தல், கணினி பராமரிப்பு, மின்மோட்டார் பழுது நீக்கம் போன்ற பணிகளில் 2022–2023ஆம் ஆண்டுக்கு தகுதியேயில்லாத எந்த ஒரு நிறுனத்திடமும் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி வாங்கப்படவில்லை. முறையாக உரிய விதிமுறைகளை பின்பற்றி வருடாந்திர ஒப்பந்தப்புள்ளியானது செய்தித்தாள் மூலம் விளம்பரம் செய்து உரிய அவகாசத்துடன் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி ரேட் கொடுத்துள்ள தகுதிவாய்ந்த நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்ற ஒப்புதல் பெறப்பட்டு அதனடிப்படையிலேயே கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களில் பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்புத்தூள் ஆகிய இரண்டு இனங்கள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட வருடாந்திர ஒப்பந்தபுள்ளிதாரர்களான ஆனந்த் ஏஜென்ஸிஸ் வீரசிகாமணி, தனுஷியா கெமிக்கல்ஸ், செங்கோட்டை ஆகிய நிறுவனத்திடம் பொது சுகாதார அத்திவாசியம் கருதி தேவைக்கு மட்டும் கொள்முதல் செய்யப்பட்டு ஜி.எஸ்.டி பதிவுபெற்ற பில் பட்டியல் பெற்று, அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலைப்பட்டியல் படி அந்தந்த நிறுவனத்தின் பெயரிலேயே கோடிட்ட காசோலை வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

5. மேலும் சிவகிரி பேரூராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி திட்டம் 2019–2020இன் கீழ் ஹைமாஸ் சோலார் விளக்கு அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பெயரில் இவ்வலுவலக இளநிலை பொறியாளரால் உரிய மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அதன்பின் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணைகள் செ.மு.ந.க. எண்.அ6/4503/2019 நாள்:17.02.2021 (வரப்பெற்ற நாள்:22.02.2021)இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.66/2021 நாள்:08.06.2021இன்படி 22.06.2021–ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து 22.06.2021–ஆம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மனுதாரரான சந்திரா ஏஜென்ஸிஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக தேர்வு செய்து தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டு இவ்வலுவலக ந.க.எண்.66/2021 நாள்: 20.07.2021–இன்படி வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி புகார் அளித்துள்ள சந்திரா ஏஜென்ஸிஸ் உரிமையாளர் திரு. எஸ். செல்வகுமார் என்பவரே மேற்படி பணியை செய்து முடித்துள்ளார். மேற்படி புகார் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்பது இதன் மூலம் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

6. மேலும் சிவகிரி பேரூராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி திட்டம் 2020–2021–இன் கீழ் 10 எல்.இ.டி விளக்குகள் அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பெயரில் இவ்வலுவலக இளநிலை பொறியாளரால் உரிய மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அதன்பின் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணைகள் செ.மு.ந.க.எண்.அ8/1822/2020 நாள்:03.12.2020 இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண். 800/2020 நாள்:23.12.2020–இன்படி 12.01.2021–ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து 12.01.2021–ஆம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் பெஸ்ட் எண்டர்பிரைசஸ், புதுக்கோட்டை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக தேர்வு செய்து இப்பேரூராட்சி இவ்வலுவலக ந.க.எண்.800/2020 நாள்: 29.01.2021–இன்படி வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

7. 2020–ஆம் ஆண்டு சிவகிரி பேரூராட்சியில் கொரோனா தொற்று பரவலை தடுக்கும் பொருட்டு பொதுமக்களின் நலன் கருதி நீம் ஆயில் சப்ளை செய்ய இவ்வலுவலக விலைப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.188/2020 நாள்:20.4.2020–இன்படி குறுகிய கால விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் 24.04.2020–ஆம் தேதியன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் முத்து காமாட்சி டிரேடர்ஸ், திருச்சி நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை தேர்வு செய்து இப்பேரூராட்சி தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து இவ்வலுவலக விநியோக உத்தரவு ந.க.எண்.188/2020 நாள்:25.04.2022–இன்படி வேலை உத்தரவு வழங்கப்பட்டு நீம் ஆயில் கொள்முதல்

செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ஓ.மு. 1711/2020/பு1 நாள்: 11.05.2020–இன்படி பட்டியல் அனுமதி பெறப்பட்டு மேற்படி நிறுவனத்திற்கு கோடிட்ட காசோலை மூலமே தொகை வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

8. மேலும் இப்பேரூராட்சியில் தெரு விளக்கு உதிரி சாமான்கள் 3 மாதங்களுக்கு தேவையான அளவு கொள்முதல் செய்யப்படும் 01.04.2021 முதல் நாளது தேதிவரை 2022–2023ஆம் நிதியாண்டிற்கு வருடாந்திர ஒப்பந்தப்புள்ளிதாரரான ஸ்ரீ கங்கா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்திடமிருந்து இவ்வலுவலக செ.சீ எண். 187 நாள்: 23.08.2022 தொகை ரூ. 2,50,905/– இக்கு மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் உதிரி சாமான்கள், பொது சுகாதார சாமான்கள் ஆகியவை தேவைக்கு ஏற்ப அவ்வப்போது வருடாந்திர ஒப்பந்தப்புள்ளிதாரரிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் குடிநீர் பராமரிப்பு பணிகள் மற்றும் சிறுசிறு பழுது பார்த்தல் பணிகள் அனைத்தும் இளநிலை பொறியாளரின் மேலொப்பம் பெற்றே பணி மேற்கொள்ளப்பட்டு பணி செய்தவருக்கு கோடிட்ட காசோலையை வழங்கப்படுகிறது என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது. மனுதாரர் குறிப்பிட்டது போல மாதந்தோறும் 5 இலட்சம் முதல் 10 இலட்சம் என போலியாக செலவினம் ஏதும் செய்யப்படவில்லை என்ற விபரம் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

9. மேலும் 2020–2021, 2021–2022 மற்றும் 2022–2023 ஆகிய வருடங்களில் முறைப்படி ஒப்பந்தப்புள்ளி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்பட்டு அதற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை தேர்வுசெய்யப்பட்டு மன்றத் தீர்மான நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், மேற்படி சுற்றறிக்கைகளை முறையாக பின்பற்றியே வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி நடத்தப்படுகிறது என்ற விபரமும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

10. அரசாணை மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் சுற்றறிக்கையின் அடிப்படையில் தமிழ்நாடு ஒலிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் ஒப்பந்தவிதிகள் 2000 அடிப்படையில் முறையாக பின்பற்றப்பட்டு திட்ட மதிப்பீடுகள் தயார் செய்து நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்றும் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு குறைந்த ஒப்புந்தப்புள்ளி அளித்த நிறுவனங்களுக்கு மன்ற ஒப்புதல் பெற்று உரியவாறு வேலை உத்தரவு வழங்கி பணி முடிக்கப்பட்டு ஒப்பந்ததாரருக்கு குறுக்குகோடிட்ட காசோலை மூலம் தொகை வழங்கப்படுகிறது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

11. மேற்கண்டவாறு பேரூராட்சியில் செய்யப்படும் செலவினங்கள் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் உதவி இயக்குநர் உள்ளாட்சி

நிதித்தணிக்கை அலுவலக அலுவலர்களால் ஆண்டு தோறும் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கை செய்யப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

12. தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் மனுதாரரின் கோரிக்கைககளுக்கு தகவல் அறியும் உரிமைச்சட்ட விதிகளின் படியும் மாண்பமை தகவல் ஆணைய முன்னாள் தீர்ப்புகளின்படியும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என்ற விபரமும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

7) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், சிவகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தமது மனுவில் **சிவகிரி பேரூராட்சி செயல் அலுவலர் திரு**. S.R. **நவநீதகிருஷ்ணன்** மாதா மாதம் ரூ.8950ல் இருந்து ரூ.9950க்குப் பில் மட்டும் போட்டு பொருட்கள் வாங்குவதில்லை என்றும் அத்தொகைக்கு 10 முதல் 20 சதவீதம் கமிஷன் எடுக்கப்படுவதாக தெரிவித்துள்ளார். அதே போல் தகுதியே இல்லாத நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெறப்பட்டு பொருள் வாங்காமல் பில் போடப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

பேரூராட்சி இயக்குநரின் சுற்றறிக்கையின்படி ஒப்பந்தபுள்ளி நடத்தாமல் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஒப்பந்தபுள்ளி கொடுப்பதாகவும், பேரூராட்சியில் பிளிச்சிங் பவுடர், பினாயில் சுண்ணாம்பு தூள், கொசு மருந்து, தளவாட பொருள், புல் வெட்டுதல் குழி தோண்டுதல், ஜெராக்ஸ் எடுத்தல் ஜே.சி.பி. இயந்திரம் வாடகைக்கு எடுத்தல் போன்ற இனங்களுக்கு GST வரி கட்டும் நிறுவனங்களிடம் பில் வாங்குவதில்லை என்றும் GST பதிவு இல்லாத வரி கட்டாத நிறுவனங்களின் பெயரில் போலியாக பில் போடுவதாக கூறியுள்ளார்.

2019 முதல் 2022 வரை உயர்கோபுர விளக்கு அமைத்தல் எல்.இ.டி விளக்குகள் வாங்கியதில் பெரிய அளவில் முறைகேடு நடந்துள்ளது என்றும் மேலும் 2020-ஆம் ஆண்டிலிருந்து 2022-2023–ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொண்ட நிறுவனங்களை நேரில் அழைத்து பேசி ஆராய்ந்து பொருட்களை வாங்காமல் பில் மட்டும் வாங்குவதாக தெரிவித்து இவ்வாறு முறைகேட்டில் ஈடுபட்ட பேரூராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க மனுதாரர் கோரியுள்ளார்.

மேலும் மனுதாரர் 13.10.2022 நாளிட்ட நேரடி விசாரணையிலும் இதே குற்றச்சாட்டுகளைத்தான் **சிவகிரி பேரூராட்சியின்** மீது சுமத்தியுள்ளார்.

**சிவகிரி இரண்டாம்நிலை பேரூராட்சிக்கு** 2020–21, 2021–22 மற்றும் 2022–23 ஆகிய மூன்று ஆண்டுக்கான பொது சுகாதாரம், குடிநீர் திட்டம் மற்றும் இதர பொருட்கள் சப்ளை செய்ய செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலமாக நாளிதழில் பிரசுரம் மேற்கொண்டும் முந்தைய சப்ளைதாரர்களுக்கு கடிதம் வாயிலாக வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டும் அதன்பேரில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டும் அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளிகள் பேரூராட்சி மன்ற தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி நிறுவனத்திடமிருந்து அவ்வப்போது தேவையான பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றது என்பதை செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மேலும் **சிவகிரி பேரூராட்சியில் 2019–2020** ஆம் ஆண்டு பொதுநிதி திட்டத்தில் சூரிய சக்தியில் இயங்கும் உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல் பணி மேற்கொள்ள அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு **20.09.2019** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த செல்வராஜ் & கோ, திருச்சி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு சூரிய சக்தியில் இயங்கும் உயர்கோபுர மின்விளக்கு அமைக்கப்பட்டுள்ளதும் அறிக்கையின் மூலம் தெரியவருகிறது.

**சிவகிரி பேரூராட்சிக்கு** கொள்முதல் செய்யப்படும் பொதுசுகாதாரப்பொருட்கள் அனைத்தும் பேரூராட்சியின் திடக்கழிவு மேலாண்மை திட்டம், பொதுசுகாதாரம், டெங்கு/கொரோனா நோய்த்தடுப்பு பணிக்கு அவசிய மற்றும் அத்தியாவசிய தேவைக்கேற்ப அவ்வப்போது வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாங்கப்பட்டு இருப்பு பதிவேட்டில் முறையே பதிவு செய்யப்பட்டு அவ்வப்போது எடுத்து பொதுமக்களுக்கு தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கை பணி மேற்கொள்ளும் பொருட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதும் அறிய முடிகிறது.

மேலும் மனுதாரரான சந்திரா ஏஜென்சீஸ் நிறுவனம் கடந்த **2016–2017** ஆம் ஆண்டு முதல் 2021–22 ஆகிய 6 வருடங்கள் **சிவகிரி பேரூராட்சியில்** வருடாந்திர ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொண்டு, அதில் குறைந்த விலைப்புள்ளிதாரராக இருந்து வந்து பொது சுகாதார பொருட்கள் 6 வருட காலமாக தொடர்ந்து, **சிவகிரி பேரூராட்சியில்** வருடாந்திர ஒப்பந்தப்புள்ளிதாரராக இருந்து பொருட்கள் விநியோகம் செய்து வந்துள்ளார் என்பதையும் விசாரணையின் மூலம் அறிய முடிகிறது.

மனுதாரர் தனது மனுவில் **சிவகிரி** பேரூராட்சி செயல் அலுவலர் மாதா மாதம் ரூ.**8950**ல் இருந்து ரூ.**9950**க்குள் பில் போட்டு பொருட்கள் வாங்காமல் பில் மட்டும் வாங்கப்பட்டு அத்தொகைக்கு 10 சதவிகிதம் முதல் 20 சதவிகிதம் கமிஷன் பெறுவதாக தெரிவித்துள்ளார். இவர் புகாராக **சிவகிரி பேரூராட்சி** செயல் அலுவலரை மட்டும் குறிப்பிடவில்லை. **ஆலங்குளம், ஆயக்குடி, திருவேங்கடம், குற்றாலம் மற்றும் சிங்கம்புணரி ஆகிய பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள்** மீதும் இதே குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார். **ஒரே தொகையை** எவ்வாறு மற்ற பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் மீதான குற்றச்சாட்டாக குறிப்பிட முடியும். இது கற்பனைக்கு எட்டாத விஷயமாக உள்ளது. மேலும் எந்த நிறுவனத்திற்கு பட்டியல் தொகை கொடுக்கப்பட்டது; என்ன பொருட்கள் வாங்க பட்டியல் தொகை கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை மனுதாரர் குறிப்பிடவில்லை. இக்குற்றச்சாட்டிற்கு எந்தவிதமான ஆதார ஆவணத்தையும் மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை.

2022–2023–ஆம் ஆண்டுக்கான பொருட்கள் சப்ளைக்கு தகுதியே இல்லாத பல நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெறப்பட்டு பட்டியல் தொகை கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் பொருட்கள் வாங்கவில்லை என்று மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் குறிப்பிட்டு எந்த ஒரு நிறுவனத்தின் பெயரையும் மனுதாரர் குறிப்பிடவில்லை, எந்த பொருளுக்கு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் அவர் தெரிவிக்கவில்லை.

**சிவகிரி பேரூராட்சியில்,** பிளிச்சிங் பவுடர், பினாயில் போன்ற சுகாதாரப் பொருட்கள் வாங்குவதில் மற்றும் புல் வெட்டுதல், குழி தோண்டுதல், ஜெராக்ஸ் எடுத்தல், ஜே.சி.பி. இயந்திரம் வாடகைக்கு எடுத்தல், குடிநீர் குழாயில் ஏற்படும் பழுதுகள் போன்ற இனங்களுக்கு G.S.T. வரி கட்டும் நிறுவனங்களிடம் பில்வாங்கவில்லை என்றும், GST பதிவு இல்லாத வரி கட்டாத நிறுவனங்களின் பெயரில் போலியாக பில் தயார் செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார். இக்குற்றசாட்டிலும் வரி கட்டும் GST நிறுவனம் எது, வரி கட்டாத போலியான GST பதிவு இல்லாத

நிறுவனம் எது, எந்த போலியான நிறுவனத்தில் பில் தயார் செய்யப்பட்டது என்ற விவரத்தையும் மனுதாரர் குறிப்பிடவில்லை. இதற்கான ஆதார ஆவணங்கள் எதையும் சமர்ப்பிக்கப்படவில்லை.

**சிவகிரி பேரூராட்சியில்** மார்கெட் விலையைவிட அதிக விலை கொடுத்து சோலார் உயர் கோபுர விளக்குகள் (6 எண்ணப் பிட்டிங்ஸ் உள்ளது) தெரு விளக்கு LED விளக்குகள் நீம் ஆயில் போன்ற இனங்களுக்கு பேப்பர் விளம்பரம், ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு பொது நிதியில் வாங்கப்பட்டதாக மனுதாரர் தெரிவித்துள்ளார். இதிலும் ஒரு குறிப்பிட்ட நிறுவனம் என்றுதான் தெரிவித்துள்ளார். நிறுவனத்தின் பெயரை குறிப்பிடவில்லை. ஆதார ஆவணங்கள் எதையும் இந்த குற்றச்சாட்டிற்கும் சமர்ப்பிக்கப்படவில்லை.

பேரூராட்சியின் பொது நிதியில் இருந்து பொது சுகாதாரப் பொருள், தெருவிளக்கு, குடிநீர் குழாய் பொருட்கள் வாங்குவதில் தரம் வாரியாக ரூ.5 லட்சம் முதல் 10 லட்சம் வரை முறைகேடுகள் நடப்பதாக தெரிவித்துள்ளார். மேற்கண்ட புகார் குறித்து தரம் வாரியாக யார் பெயரையும் குறிப்பிடவில்லை. ஆதார ஆவணங்கள் எதையும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை.

2020 ஆம் ஆண்டு முதல் 2022-2023 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட நிறுவனங்களை நேரில் அழைத்தும் பைல்கள் மற்றும் பில்களை வாங்கியும் ஆராய்ந்து பொருட்களை வாங்காமல் பட்டியல் தொகை மட்டும் வாங்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார். இதிலும் எந்த நிறுவனத்திடம் பட்டியல் தொகை வாங்கப்பட்டது என்ற விவரம் இல்லை. மேற்சொன்ன குற்றசாட்டுகள் அனைத்தும் **சிவகிரி பேரூராட்சியில்** மட்டும் நடைபெறவில்லை. **சிவகிரி பேரூராட்சி** உட்பட மேற்குறிப்பிடப்பட்டுள்ள 5 பேரூராட்சிகளிலும் நடைபெறுவதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். குற்றச்சாட்டுகள் அனைத்தையும் ஆதார ஆவணமின்றி மனுதாரர் சுமத்தியுள்ளார். இவை ஏற்க கூடியதாகவும் நம்பக்கூடியதாகவும் இல்லை.

வருடாந்திர ஒப்பந்த முறையை ரத்து செய்து பேரூராட்சிக்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து E Token Digital Signer Tender Two Cover System முறையை தெரிவித்துள்ளார். ஆனால் The Tamil Nadu Transparency in Tenders Act, 1998 (Tamil Nadu Act of 1998) Chapter – V 18 (3) ல் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது,

> **[ (3) The Tender Inviting Authority shall permit the submission of tenders by post or courier or by electronic submission through the designated website, wherever applicable, provided that the Tender Inviting Authority shall not be responsible for any delay in transit in such cases.]**

மேலும் மனுதாரர் (சந்திரா ஏஜென்சி நிறுவனம்) 2016-17ஆம் ஆண்டிலிருந்து 6 – ஆண்டுகள் **சிவகிரி பேரூராட்சியில்** வருடாந்திர ஒப்பந்தபுள்ளிகளில் கலந்துகொண்டு குறைந்த விலைப்புள்ளிதாரராக இருந்து பொது சுகாதார பொருட்களை விநியோகம் செய்து வந்துள்ளார்.

இவருக்கு ஒப்பந்தபுள்ளியில் கலந்துகொள்ளும் முறைகள் அனைத்தும் தெரிந்திருக்க வேண்டும், தெரியவில்லை என்றால் **சிவகிரி பேரூராட்சியில்** 6 ஆண்டுகள் எவ்வாறு குறைந்த விலை புள்ளிதாரராக இருந்திருக்க முடியும்? எனவே, மனுதாரர் வேண்டுமென்றே, பேரூராட்சியின் மீது பொய்யான குற்றசாட்டுகளை சுமத்தியுள்ளார். இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது. ஒரே மாதிரியான குற்றசாட்டுகளை அதே புள்ளி விபரங்களோடு 6 பேரூராட்சி நிர்வாகத்தின் மீது சுமத்தியுள்ளார். இச்செயல் கண்டனத்திற்குரியது; மேலும் தமது குற்றசாட்டுகள் ஒன்றிற்கு கூட மனுதாரரால் ஆதார ஆவணத்தை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் இவரால் 6

பேருராட்சி நிறுவனங்களின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் ஆதார ஆவணங்களற்ற குற்றச்சாட்டுகள் என்று இம்முறைமன்றம் முடிவு செய்து பேருராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று இம்மனு மீதான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்துவைக்க முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இங்ஙனம் ஆதாரமற்றக் குற்றச்சாட்டுக்களை 6 பேரூராட்சிகள் மீதும் சுமத்தியது மனுதாரருக்கு அழகல்ல என இம்முறைமன்றம் கருதுகிறது.

எனினும் **சிவகிரி பேரூராட்சியில்** கொள்முதல் செய்யப்படும் பொது சுகாதாரப் பொருட்கள் அனைத்தும் வருடாந்திர ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு GST வரி கட்டி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாங்கப்பட்டு இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு முறையாக பயன்படுத்தப்பட்டு வருகிறதா என்பதை உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் உரிய ஆய்வு செய்து முறைகேடுகள் நடைபெற்றிருப்பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை துறை இயக்குனருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 2 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. S. செல்வகுமார்,
   சந்திரா ஏஜென்ஸிஸ்,
   நெ.96, வடக்கு ஒப்பனை தெரு,
   தென்காசி 627 811.
2. செயல் அலுவலர்,
   சிவகிரி பேரூராட்சி,
   தென்காசி மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   தென்காசி மாவட்டம்.
4. பேரூராட்சிகளின் ஆணையாளர்,
   பேரூராட்சிகளின் ஆணையரகம்,
   நகர்நிர்வாக அலுவலகம்,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.
5. இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
   பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
   நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி. நகர், சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.

இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.